பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
18 07 2025 7 15
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி பீஹார் மற்றும் மேற்குவங்கத்தில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

2. உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட ஐ.என்.எஸ். – **Nistar** கப்பலை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

3. பஹல்காம் தாக்குதலுக்குப் பின்னணியில் இருந்த அமைப்பை பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

4. பீஹாரில் மின்னல் தாக்கி 19 பேர் உயிரிழந்தனர்.

5. ஸ்விஸ் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் கதே -விஜய் சுந்தர் பிரசாந்த் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி பீஹார் மற்றும் மேற்குவங்கத்தில் இன்று நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.

பீஹார் மாநிலத்தில் இன்று 7 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைப்பதோடு புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

அம்மாநிலத்தின் கிழக்கு **Champram** மாவட்டம் **Motihari** நடைபெற உள்ள நிகழ்ச்சியில் ரயில்வே, நெடுஞ்சாலை, ஊரக வளர்ச்சி, மீன்வளம், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளைச் சார்ந்த வளர்ச்சிப் பணிகளை தொடங்கி வைக்கிறார்.

பீஹார் மாநிலத்தில் உள்ள நகரங்களை, நாட்டின் இதர பகுதியில் உள்ள முக்கியமான நகரங்களோடு இணைக்க வகை செய்யும் அமிர்தகால ரயில் சேவைகளையும் அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

சமஸ்திபுர் - **Bachhwara** ரயில் நிலையங்களுக்கு இடையே தானியங்கி ரயில்வே சமிஞ்ஞை முறையையும் அவர் தொடங்கி வைக்க இருக்கிறார்.

தர்பங்கா – தல்வாரா, சமஸ்திபுர் - **Rambhadrapur** இடையே 580 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள ரெட்டைப் பாதை திட்டத்தையும் அவர் தொடங்கி வைக்கிறார்.

பட்னா அருகேயுள்ள பாடலிபுத்ராவில் வந்தேபாரத் ரயில் பராமரிப்பு பணிமனையையும் அவர் தொடங்கி வைக்கிறார்.

பின்னர் மேற்குவங்கம் செல்லவுள்ள பிரதமர், துர்காபூரில் சுமார் 5 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்தும், புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உரையாற்ற உள்ளார்.

எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு, எரிசக்தி, ரயில்வே, சாலைகள் உள்ளிட்டவை இந்த வளர்ச்சித் திட்டப் பணிகளில் அடங்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நிலையில் பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், மேற்குவங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் அரசின் தவறான ஆட்சியால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

அம்மாநில மக்கள் பிஜேபி மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளதாகவும், பிஜேபி அரசு அமைந்தால் மட்டுமே அதிகமான வளர்ச்சித் திட்டங்கள் அமலாகும் என்ற நம்பிக்கை அந்த மக்களின் மனதில் எழுந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இன்று நாட்டுக்கு அர்ப்பணித்து வைக்கிறார்.

விசாகப்பட்டினத்தில் உள்ள இந்திய கடற்படை தளத்தில் நடைபெற உள்ள நிகழ்ச்சியில் பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத், இந்திய கடற்படையின் தலைமைத் தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி உள்ளிட்டோர் பங்கேற்கிறார்கள்.

மீட்புப் பணியில் ஈடுபடும் நோக்கில் பல்வேறு வசதிகளைக் கொண்ட இந்தக் கப்பல், சுயசார்பு இந்தியா இயக்கத்திற்கு வலுசேர்க்கும் வகையில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

120க்கும் மேற்பட்ட சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் பங்களிப்பு மற்றும் 80 சதவீதத்திற்கும் அதிகமான உள்நாட்டு சாதனங்களைக் கொண்டு இந்தக் கப்பல் கட்டப்பட்டுள்ளது.

<<<<>>>>

பீஹாரில் மின்னல் தாக்கி 19 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்துள்ளனர்.

நாளந்தா மற்றும் வைஷாலி மாவட்டங்களில் மின்னல் தாக்கியதில் இவர்கள் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு 4 லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என்று பீஹார் முதலமைச்சர் திரு. நிதிஷ் குமார் அறிவித்துள்ளார்.

அம்மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் இன்று மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதனிடையே ஹிமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், உத்தரப்பிரதேச மாநிலங்களிலும், ஜம்மு-கஷ்மீரிலும் அடுத்த 5 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான் மாநிலங்களிலும் அடுத்த 24 மணி நேரத்திற்கு இதே நிலை காணப்படும் என்றும், மத்தியப்பிரதேச மாநிலத்திலும் கனமழைக்கான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

கேரளா, தெற்கு கர்நாடகாப் பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ராஜஸ்தான் மாநிலத்தில் கனமழை பெய்து வருவதால் கோட்டா மாவட்டத்தில் செய்யப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா நேற்று மாவட்ட அதிகாரிகளுடன் ஆய்வு செய்தார்.

நிலைமையை எதிர்கொள்ள பேரிடர் மீட்புப் படையினர் தயார் நிலையில் இருக்குமாறும் அவர் அறிவுறுத்தினார்.

இந்நிலையில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்து வரும் கனமழை காரணமாக தமிழகத்தின் ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து 20 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - 40 நொடிகள்)

<<<<>>>>

தூய்மை நகரங்களுக்கான விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் நேற்று வழங்கினார்.

தூய்மைப் பணிகளை சிறப்பாக மேற்கொண்டதற்கான விருது நாமக்கல் மாநகராட்சிக்கு கிடைத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - கண்ணன் - 48 நொடிகள்)

<<<<>>>>

பஹல்காம் தாக்குதலுக்குப் பின்னணியில் இருந்த அமைப்பை பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்க் வெளியுறவுத்துறை விடுத்துள்ள ஒரு அறிக்கையில், **The Resistant Front** வெளிநாட்டு பயங்கரவாத அமைப்பு என்றும், இது திட்டமிட்டு பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவதால் தேசிய நலன்களைப் பாதுகாப்பதற்கு இந்த நடவடிக்கை அவசியமானது என்று கூறியுள்ளது.

பஹல்காம் தாக்குதலுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என்று அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும் அந்நாட்டு வெளியுறவுத்துறை கூறியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 22ஆம் தேதி நடைபெற்ற பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்திற்கு லஷ்கரே தொய்பா அமைப்பின் துணை அமைப்பான **TRF** பொறுப்பேற்றதையும் அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

<<<<>>>>

மோசமான வானிலையால் நிறுத்தப்பட்டிருந்த அமர்நாத் புனித யாத்திரை இன்று மீண்டும் தொடங்கியது.

வானிலையில் ஏற்பட்ட முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு இன்று அதிகாலை ஜம்மு பகவதி நகரில் உள்ள முகாமில் இருந்து பக்தர்கள் செல்வதற்கு அதிகாரிகள் அனுமதி அளித்துள்ளதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

335 வாகனங்களில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், துறவிகள் என 9 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் இந்த யாத்திரையல் பங்கேற்றுள்ளனர்.

நேற்று வரை கடந்த 15 நாட்களில் சுமார் 2 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான பக்தர்கள் பனி லிங்கத்தை தரிசித்துள்ளனர்.

இம்மாதம் 3ஆம் தேதி தொடங்கிய 38 நாள் அமர்நாத் யாத்திரை அடுத்த மாதம் 9ஆம் தேதி முடிவடைய உள்ளது.

<<<<>>>>

யுக்ரைன் நாடாளுமன்றம் புதிய பிரதமரை நியமனம் செய்துள்ளது.

39 வயதான **Yulia Sbyrydenko** பதவியேற்றது முதல் 5 ஆண்டுகளுக்கு இந்தப் பொறுப்பில் இருப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா உடனான அமைதிக்கான வாய்ப்பு குறைந்து வருவதால், போர்க்கால நடவடிக்கைகளை திறம்பட சமாளிக்க இவரது நியமனம் அவசியம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

போர் காரணமாக யுக்ரைன் கடுமையான நெருக்கடியில் சிக்கியுள்ளது. மேலும் ஆயுத கொள்முதல் காரணமாக சரிந்துள்ள பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு முயற்சிகளை புதிய பிரதமர் மேற்கொள்ள வேண்டும் என்று அதிபர் திரு. வோலோடிமிர் ஜெலன்ஸ்கி உத்தரவிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அதிபர் யுக்ரைன் போர்க்களத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களின் பங்களிப்பு அடுத்த 6 மாதங்களுக்குள் 40 சதவீதத்தில் இருந்து 50 சதவீதமாக அதிகரிக்கும் என்று கூறினார்.

<<<<>>>>

ஸ்விஸ் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் கதே -விஜய் சுந்தர் பிரசாந்த் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-3, 7-6 என்ற செட் கணக்கில் ஜெர்மனியின் **Jakob – Mark Wallner** இணையை வென்றது.

<<<<>>>>

ஹங்கேரியில் நடைபெற்று வரும் சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சுஜித் தங்கப் பதக்கம் வென்றார்.

ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவில் அவர் 5-1 என்ற புள்ளிக் கணக்கில் ஐரோப்பாவின் **Ali Rahimzade**-யை வென்றார்.

இப்போட்டியின் ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவில் ராகுல் வெண்கலப் பதக்கம் வென்றார்.

<<<<>>>>

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டி அக்டோபர் 27ஆம் தேதி தொடங்கி நவம்பர் 2ஆம் வரை நடைபெறும் என்று துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**<<<<The End>>>>**